DINAKARAN 10.05.2015



திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி விழாவில் சென்னை புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவன தலைவர் டாக்டர் வி.சாந்தா பல்கலைகழக அளவில் ரேங்க் பெற்ற 25 மாணவர்களுக்கு பதக்கங்களையும், 750 பேருக்கு பட்டங்களையும் வழங்கினார். அருகில் அஸ்சென்டர்ஸ் நிறுவன முதன்மை செயல் அலுவலர் டாக்டர் கே.திருஞானம், கல்லூரி தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ், முதல்வர் விஜயராகவன்.

திருநின்றவூர்

# ஜெயா பொறியியல் கல்லூரியில் 16வது பட்டமளிப்பு விழா

திருவள்ளூர், மே 10: திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியில், 16வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில், 775 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.

விழாவுக்கு கல்லூரித் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். செயலாளர் க.விஜயகுமாரி, துணைத்தலைவர் க.நவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் விஜயராகவன் வரவேற்றார்.

விழாவில், சென்னை புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவன தலைவர் டாக்டர் வி.சாந்தா கலந்து கொண்டு, பல்கலைக்கழக அளவில் ரேங்க் எடுத்த 25 மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பட்டங்களையும், 750 மாணவர்களுக்கு பட்டங்களையும் வழங்கி பாராட்டி பேசினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ''மாணவர்களாகிய நீங்கள் பட்டம் பெறுவதை கண்டு, உங்களது பெற்றோர் ஆனந்த கண்ணீர் விடுவதை இங்கு கண்டேன். உங்களை வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை என்றும் மறக்கக் கூடாது.

நீங்கள் இனி உங்களது பெற்றோரை எதிர்பார்க்காமல், நல்ல வேலைக்கு சென்று தங்களை தாங்களே வாழ்க்கையில் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும்'' என்றார்.

விழாவில், அஸ்சென்டர்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவன முதன்மை செயல் அலுவலர் டாக்டர் கே.திருஞானம் மாணவர்களை வாழ்த்தி பேசினார்.